# ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தில் cijge;jhl;l FOtpd; தோற்றமும் வளர்ச்சியும்

இன்று 29.05.2018இல் திரு.அருணாசலம் இராசரத்தினம் எனும் ஆதிகோவிலடியின் மூத்த பிரஜையை மண்ணாட்சி மணல் ஊரிக்காட்டில் அவர் இருந்த வீட்டில் சந்திக்க ஒரு அரிய வாய்ப்பு கிடைத்தது.

என்னுடன் கூட ஆதிகோவிலடியைச் சேர்ந்தவரும் ஆதிகோவிலடி வரலாற்றில் மிகவும் அக்கறை கொண்டவரும் ஆலடியில் அமைந்துள்ள MGR நற்பணி மன்றத்தின் தலைவருமான திரு.தில்லையம்பலம் ஜெயராஜ் அவர்களும் இருந்தார்.

எனக்கும் திரு.அ.இராசரத்தினம் அவர்களுக்கும் இடையேயான கருத்துப்பரிமாறலில் திரு.தி.ஜெயராஜ் முக்கிய பங்கேற்று, நான் தரவுகளை சேகரிப்பதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்.

முதலில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் பற்றி அவருக்கு தெரிந்த விடயங்களை முக்கியமாக அதன் தோற்றத்தை பற்றி கூறும்படி கேட்டதற்கிணங்க பின்வரும் தகவல்களை தந்துதவினார்.

இவருடைய ஞாபகசக்திக்கு எட்டியவரை உரிய தகவல்களையும், தனது பங்களிப்பையும் மிகவும் பெருமையுடன் ஆனால் பக்குவமாக எனக்குத் தெரிவித்தார். இப்பெரியவர் ஏனையோரால் இராசரத்தினச்சாமியார் என செல்லமாக அழைக்கப்படுவார். இவரின் கூற்றுப்படி …

அக்காலத்தில் அதாவது 1950களில் இளைஞர்களாக இருந்த சிலர் ஏனைய கழகங்களுடன் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் பங்குகொண்டு ஆதிகோவிலடிக்கு பெருமை சேர்க்க வேண்டுமென்ற வேட்கை கொண்டிருந்தனர். எனவே கீழ்வருவோர் ஒரு குழுவாக இணைந்து உதைபந்தாட்ட போட்டிகளில் பங்குபற்ற தம்மை தயார்படுத்திக் கொண்டனர். இவர்களுக்கு இவ் எண்ணக்கருவை விதைத்வர்களுள் முக்கியமானவர் ஆதிகோவிலடி பெரிய ஒழுங்கையில் பொன்னப்பா கிணற்றடியில் வசித்து வந்த அமரர் செந்திவேல் அவர்களாவார்.




குழுவில் பங்குகொண்டோரின் பெயர்களுள் தனக்கு ஞாபகத்தில் இருப்பவர்களை எனக்கு கூறினார். அவர்களது பெயர்கள் வருமாறு..

1. திரு. அருணாசலம் இராசரத்தினம் ( பேட்டி தருபவர்)
2. கிட்டினபிள்ளை தம்பிராசா (அமரர்)
3. சிவகுரு தில்லையம்பலம் (அமரர்
4. சுந்தரம் அழகுராசா (அமரர்)
5. இராசா சேதுலிங்கம் (அமரர்)
6. சிங்காரம் தில்லையம்பலம் (அமரர்)

இவருடைய கணிப்பின்படி தனக்கு 20 வயதாக இருக்கும் பொழுது ( இவருடைய பிறந்த திகதி 05.05.1937) இக்குழு உருவாக்கப்பட்டதாக கூறினார். **எனவே 1957ல் இக்குழு உருவாக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.**

உதைபந்தாட்ட குழுவிற்கு இன்னும் சில வீரர்கள் தேவைப்பட்டமையால் காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த நான்கு நண்பர்களையும் இணைத்துக் கொண்டனர். (இவர்களுடைய பெயர்கள் மறந்துவிட்டதாக கூறினார்.)

இவர்களுடைய முதலாவது போட்டி நெற்கொழு மைதானத்தில் நடைபெற்றதாகவும் இதில் 5 கழகங்கள் பங்கு பற்றியதாகவும் இப்போட்டி முடிவில் தாம் இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டதாகவும் கூறினார்.

இந்தப் போட்டியில் உங்களது அனுபவத்தை எதாவது கூற முடியுமா ? என்று கேட்டதற்கு தாங்கள் “ **வதிரி பம்பஸ் கழகத்துடன்**” கடும் போட்டியை எதிர்கொண்டதாக கூறினார். இதனைத் தொடர்ந்து ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் என ஏற்கனவே எங்களை பதிவு செய்து கொண்ட நாங்கள் ஆதிகோவிலடி இளைஞர்களிடையேயே விளையாட்டு வீரர்களை உருவாக்கிக் கொண்டோம்.

எங்களது இக்குழு திருமண பந்தங்களில் இணைந்த பின்னர் அடுத்த சந்ததியினர் எங்கள் உதைபந்தாட்டக் குழுவை தொடர்ந்து நடாத்தி பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். எங்களது இக்குழுவை முதலாவது குழுவாக எடுத்துக் கொண்டால் அதன் பின்னர் கீழ்க்காணும் அங்கத்தவர்களைக் கொண்ட குழுவைக் குறிப்பிடலாம். இதை இரண்டாவது குழுவாகக் கொள்ளலாம்.

முதலாவது குழுவிற்கு **அமரர் செந்திவேல்** எவ்வாறு பின்ணனியில் இருந்து செயற்பட்டு ஊக்குவித்தாரோ அதேபோல இரண்டாவது குழுவிற்கு **திரு.நாரயணசாமி மயோன்ராசா** பின்புலமாக இருந்து ஊக்கம் அளித்ததையும் குறிப்பிடலாம்.

1. சின்னத்துரை குணபாலசிங்கம் (குணபாலி)
2. சிவகுருகுட்டியப்பாவின் மகன் குணரட்ணம் - அமரர்
3. பொன்னுத்துரை மாயவன்
4. சாமிநாதர் பரமசிவம் அமரர் ( பரமன்)
5. சாமிநாதர் ஞானசிவம் (ஜேர்மனி)
6. ஜய்யாத்துறை நித்தியானந்தம் (இராசகிளி)

இவ்வழியில் மூன்றாவது குழுவாக பின்வருவோரைக் குறிப்பிட்டார்

குறிப்பு:- இரண்டாவது மற்றும் மூன்றாவது குழுக்களின் வீரர்களைப்பற்றி நேர்காணலில் என்னுடன் இருந்த திரு.ஜெயராஜ் அவர்களும் பாரிய பங்களிப்பு நல்கினார்.

மூன்றாவது குழு வீரர்களின் பெயர்கள் வருமாறு..

1. இராசரத்தினம் இராஜகோபால் (அமரர்)
2. சாமிநாதர் சாந்தசிவம் (சாந்தன்)
3. தங்கவேல் சண்முகவடிவேல்(குட்டிமணி)
4. ஜய்யாத்துறை தங்கத்துரை
5. கீப்பர் தில்லையம்பலம் - அமரர் (திருகோணமலை)
6. …………கருணாகரன் (திருமலை)
7. ………… பத்மநாதன்
8. தம்பிராசா பரமானந்தராசா
9. பாலசிங்கம் பரந்தாமன்
10. தங்கவேலாயுதம்( தங்கக்குட்டி) ஸ்ரீராமசந்திரன் - (ஸ்ரீ -UK)
11. தம்பிராசா நவகுலராசா
12. தில்லையம்பலம் சிவஞானம் (பொலிஸ்)



16.06.2018

பக்கம் 22 வலம்

# எப்.எ.கிண்ணம் இறுதியில் ஆதிசக்தி

நேற்று முன்தினம் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் எப்.எ. வெற்றிக்கிண்ணத் திற்கான அரையிறுதிப் போட்டியொன்று நடைபெற்றது.

இப் போட்டியில் ஆதிசக்தி உதைபந்தாட்ட அணியினை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய ஆதிசக்தி அணி 3.:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

## பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவருக்கான உதைபந்தாட்டம்

# ஆதிசக்தி சம்பியன்




கவிதா ரேடேர்ஸ், வெஸ்ரேன் யூனியன் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் பருத்தித்துறை சிரேஷ்ட லீக் உப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மாபெரும் உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி 19.05.2017 வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

தொட்க்கம் முதலே விறுவிறுப்பாக மோதிய இருகழகங்களும் கோல் கம்பங்கள் நோக்கி பந்துகள் வேகமாக நகர்ந்தன.

போட்டியின் 8 நிமிடத்தில் முதலாவது கோலை பதிவு செய்தது ஆதிசக்தி. தொடர்ந்து வேகமாக விளையாடிய அன்ரனிஸ் 13 ஆவது நிமிடத்தில் கோல் போட்டு போட்டியை சமநிலைப்படுத்த போட்டி இடைவேளையின் போது 1:1 சமநிலையில் காணப்பட்டது.

பிற்பாதியில் இரு அணிகளும் வேகமான நகர்வுகள் ஊடாக பந்து நகர்ந்த போதும் தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திய ஆதிசக்தி போட்டியின்23ஆவதுநிமிடத்தில்கோலை போட்டு முன்னிலை வகித்தது.

தொடர்ந்தும் விறுவிறுப்பாக போட்டி இடம்பெற்ற போதும் இறுதியில் 2:1 என போட்டி நிறைவு பெற ஆதிசக்தி சம்பியன் ஆகியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஆதிசக்தியின் கோல்காப்பாளர் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கியம் பெற்றுக்கொண்டது. இவர்களுக்கான பரிசில்களை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வழங்கி கௌரவித்தார். (க)

வலம்புரி 22.05.2017

# ஆதிசக்தியின் 'ஏ','பி' அணிகளுக்கு வெற்றி

**ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் 'ஏ', 'பி' அணிகள் பரபரப்பான ஆட்டங்களில் தமது எதிரணிகளை சமநிலை தவிர்ப்பு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தோற்கடித்தன.**

யாழ்ப்பாணம்,ஜன.12

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ் மாவட்ட ரீதியிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தின் 'ஏ', 'பி' அணிகள் வெற்றி பெற் றுள்ளன.

முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இந்தப் போட்டியில் இரு அணிகளுமே சமபலத்தோடு மோதிக்கொண்டன. ஒரு அணி கோல் அடித்தால் பதிலுக்கு மறு அணியும் கோல் அடித்தது. மாறி மாறி இரு அணி வீரர்களும் தத்தம் அணி சார்பில் தலா இரு கோல்களை அடித்தனர். இதனால் ஆட்டம் தொடர்ந்தும் சமநிலையிலேயே சென்று கொண்டிருந்தது. எனினும் இந்தச் சமநிலையை மாற்றி அமைத்து ஒரு கோலைப் பெற்று வெற்றியை தம் வசமாக்க இரு அணி வீரர்களும் எடுத்த முயற்சிகள் கடைசிவரைகைகூடவில்லை.

ஆட்ட நேர நிறைவில் இரு அணியினரும் தலா இரண்டு கோல்களை பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்கான 5 சமநிலை தவிர்ப்பு உதைகள்

இதில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இந்த ஆட்டத்திலும் அனல் பறந்தது. றெட்றேஞ்சர்ஸ் அணி இலகுவான வெற்றியை பெற்றுவிடும் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆயினும் சவாலான ஆட்டத்தைஆதிசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணியினர் வெளிப்படுத்தினர். ஆட்டத்தில் இறுதியில் இரு

கோலினை பெற்றி ருந்தனர். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே இந்தப் போட்டியிலும்சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலமே வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் இரு அணிகளும் தமக்கு வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு வாய்ப்புகளையே சரியாகப் பயன்படுத்தி கோல் அடித்தனர்.

இதனால் தொடர்ந்தும் இரு அணிகளும் சமநிலை யில் நீடித்தன. எனவே இரு அணியினருக்கும் மேலதிக மாக இன்னொரு சமநிலை தவிர்ப்பு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதில் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தினை வீணாக்கியது.

எனினும் ஆதி சக்தி விளையாட்டுக் கழக 'பி' அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை கோலாக மாற்றியது. இதனால் இறுதியில் ஆதிசக்தி விளை யாட்டுக் கழக 'பி' அணி 6:5 என்ற கோல் கணக்கில் றெட் றேஞ்